OL/2024(2025)/60-T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

60 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024 (2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024 (2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024 (2025)

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II
Business and Accounting Studies I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## வணிகக் கல்வியும் கணக்கீடும் I

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

● பின்வரும் சம்பவக் கற்கையை அடிப்படையாகக் கொண்டு **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

ஓமந்தைக் கிராமத்தில் அமைந்திருக்கும் 'சூழல் நேயக் காய்கறிகள்' மாதிரிப் பண்ணையில் 50 விவசாயிகள் காய்கறிகளையும் பழங்களையும் பயிரிடுகின்றனர். நீண்ட தூரம் காரணமாக குறித்த நேரத்தில் தமது உற்பத்திப்பொருட்களை பழுதடையாத புதிய நிலையிலேயே தம்புள்ளை விசேட பொருளாதார நிலையத்திற்கு எடுத்துச் செல்வதில் இவ்விவசாயிகள் போக்குவரத்துப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். இதற்கான தீர்வொன்றாக, தம்புள்ளை பொருளாதார விசேட நிலையத்தில் 'ஜனகன் காய்கறிகள்' வணிகத்தை நடாத்தும் அதன் உரிமையாளரான ஜனகன் என்பவர் அவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக 'சூழல்நேயக் காய்கறிகள்' பண்ணையின் விவசாயிகளுடன் 'உதவும் சேவைகள் சங்கம்' என்ற அமைப்பை ஆரம்பித்தார்.

**1.** 'உதவும் சேவைகள் சங்கத்தினால்' நிறைவேற்றப்படும் மனிதத் தேவை எது?
(1) உணவு (2) சுகாதாரம் (3) போக்குவரத்து (4) பாதுகாப்பு

**2.** 'ஜனகன் காய்கறிகள்' வணிகம் என்பது
(1) தனியுடைமை வணிகமாகும். (2) பங்குடைமை வணிகமாகும்.
(3) சங்கமாகும். (4) இலாப நோக்கற்ற வணிகமாகும்.

**3.** 'ஜனகன் காய்கறிகள்' வணிகத்தின் உற்பத்திக் காரணியையும் அதற்கான உதாரணத்தையும் சரியாகக் குறித்து நிற்கும் விடையைத் தெரிவுசெய்க.
(1) நிலம் - தம்புள்ளை விசேட பொருளாதார நிலையம்
(2) உழைப்பு - ஜனகன்
(3) மூலதனம் - காய்கறிகள் மற்றும் பழங்களின் இருப்பு
(4) முயற்சியாண்மை - 'சூழல்நேயக் காய்கறிகள்' பண்ணை விவசாயிகள்

**4.** 'ஜனகன் காய்கறிகள்' வணிகத்தின் அகச்சூழல் காரணியாக அமைவது
(1) ஜனகன்
(2) விவசாயிகள்
(3) 'சூழல்நேயக் காய்கறிகள்' பண்ணை
(4) தம்புள்ளை விசேட பொருளாதார நிலையம்

**5.** மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையின்படி சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) 'ஜனகன் காய்கறிகள்' வணிகமானது இலாப நோக்குடைய வணிகமாகும்.
(2) 'உதவும் சேவைகள் சங்கமானது' சட்ட ஆளுமையுள்ள அமைப்பாகும்.
(3) ஜனகன், 'சூழல்நேயக் காய்கறிகள்' பண்ணையின் அக்கறையுடைய ஒரு தரப்பினர் அல்லர்.
(4) தம்புள்ளை விசேட பொருளாதார நிலையம், தனியார் துறை வணிகமாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 6 ஆம் 7 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

இலத்திரனியல் உபகரணங்களை விற்பனை செய்யும் 'நவீன மின்' வணிகமானது, இது போன்ற உற்பத்திப்பொருட்களைக் குறைந்த விலையில் வழங்குவதற்காக அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட புதிய கடை தொடர்பில் பிரச்சினைகளை எதிர்நோக்கியது. இதனால் 'நவீன மின்' வணிகத்தின் உரிமையாளர் தனியாள் விற்பனை நிகழ்ச்சித்திட்டமொன்றை அறிமுகம் செய்தார்.

6. 'நவீன மின்' வணிகத்தின் மீது தாக்கம் செலுத்தும் புறச்சூழல் காரணி எது?
(1) வழங்குனர்கள் (2) போட்டியாளர்கள்
(3) முகாமையாளர்கள் (4) ஊழியர்கள்

7. 'நவீன மின்' வணிகத்தின் சந்தைப்படுத்தல் கலவை மாறி மேம்படுத்தலுக்கான உதாரணம்
(1) இலத்திரனியல் உருப்படிகளை விற்றல்
(2) இலத்திரனியல் உருப்படிகளை குறைந்த விலையில் விலையிடல்
(3) புதிய கடை ஒன்றை ஸ்தாபித்தல்
(4) தனியாள் விற்பனை நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தல்

8. உடைமையின் அடிப்படையில், இலங்கை துறைமுக அதிகாரசபை உரித்தாகும் வணிக அமைப்பு வகையானது
(1) தனியார் கம்பனிகள் (2) அரச கம்பனிகள்
(3) அரச கூட்டுத்தாபனங்கள் (4) அரச திணைக்களங்கள்

9. வணிகமொன்றில் தாக்கம் செலுத்தும் பொருளாதாரச் சூழல் காரணி எது?
(1) புதிய வழங்குனரிடமிருந்து மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல்
(2) இலங்கை அரசினால் அதிகரிக்கப்பட்ட வரி வீதம்
(3) ரெக் லங்கா நிறுவகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கணக்கீட்டு மென்பொருள்
(4) சிறிய, நடுத்தர முயற்சியாளர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட வணிகப் பதிவு முறை

10. காசோலைகள் மூலமான கொடுக்கல்வாங்கலுக்கு ① .......................................... கணக்கு வேண்டப்படுவதுடன் ② .......................................... காசோலையை வங்கிக் கருமபீடத்தில் பணமாக மீளப்பெற முடியாது.
மேலே தரப்பட்ட கூற்றில் முறையே ① மற்றும் ② இல் உள்ளடக்கப்பட வேண்டிய சரியான சொற்பதங்களைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) சேமிப்பு, புறக்குறிப்பிட்ட (2) நடைமுறை, புறக்குறிப்பிட்ட
(3) சேமிப்பு, குறுக்குக் கோடிட்ட (4) நடைமுறை, குறுக்குக் கோடிட்ட

11. சுகந்தன் என்பவர் கம்பஹா பேருந்து நிலையத்தில் இருந்து பாடசாலைப் போக்குவரத்துப் பேருந்தில் பாடசாலைக்குச் சென்றார்.
மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் முறையே கம்பஹா பேருந்து நிலையம் மற்றும் பாடசாலைப் போக்குவரத்துப் பேருந்து சேவை ஆகியன உரித்தாகும் போக்குவரத்து அடிப்படை மூலங்களை முறையே குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.
(1) ஊடகம், தரிப்பிடம் (2) வலு, தரிப்பிடம்
(3) வலு, ஊடகம் (4) தரிப்பிடம், ஊடகம்

12. காப்புறுதி செய்தகு நலன் தத்துவத்துடன் தொடர்புடைய நிகழ்வைத் தெரிவுசெய்க.
(1) அடகு வைத்தல் வணிகத்தை நடாத்தும் அமரன், அடகு வைக்கப்படும் நகை உருப்படிகளைக் காப்புறுதி செய்துள்ளார்.
(2) காப்புறுதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக குமாரி, தனது முழுமையான மருத்துவ அறிக்கையை வழங்கினார்.
(3) சரத், தனது மோட்டார் வண்டிக்கு ஏற்பட்ட சேதத்திற்காக மட்டும் நட்டஈட்டைப் பெற்றுக்கொண்டார்.
(4) சில தகவல்கள் வெளிப்படுத்தப்படாததன் காரணமாக விமலனின் காப்புறுதிப் பத்திரம் நிராகரிக்கப்பட்டது.

13. உற்பத்தி முகாமையாளர் ஒருவர் தனக்கு மூலப்பொருட்கள் மிக விரைவாகத் தேவைப்படுவதாக வழங்குனரான கமால் என்பவருக்கு கட்டளை மூலம் தகவல் அனுப்பினார்.
மேலே தரப்பட்ட கூற்றில் உள்ளடங்கியுள்ள தொடர்பாடல் மூலக்கூறுகள்
(1) செய்தி, துலங்கல், பின்னூட்டல் (2) அனுப்புபவர், பெறுபவர், செய்தி
(3) ஊடகம், பெறுபவர், பின்னூட்டல் (4) அனுப்புபவர், பெறுபவர், துலங்கல்

[பக். 3 ஐப் பார்க்க

14. பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி ஒழுங்கமைப்புக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

   **A** - நாளாந்தம் விளையாட்டுப் பயிற்சி நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்தல்
   **B** - இல்லத் தலைவர்களையும் விளையாட்டுத் தலைவர்களையும் நியமித்தல்
   **C** - மார்ச் மாத இறுதியில் வருடாந்த விளையாட்டுப் போட்டியை நடாத்தத் தீர்மானித்தல்
   **D** - பரிசுகள் மற்றும் வெற்றிக் கேடயங்களுக்குத் தேவையான நிதியை பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியில் இருந்து ஒதுக்குதல்

   மேலே தரப்பட்ட நடவடிக்கைகளுள் முகாமைத்துவச் செயன்முறையில் ஒழுங்கமைத்தல் மற்றும் நெறிப்படுத்தலை முறையே குறித்து நிற்பது

   (1) B, A (2) B, D (3) D, B (4) D, C

15. சந்தைப்படுத்தற் கலவையின் மாறிகளான விலை, இடம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ள கூற்றைத் தெரிவுசெய்க.
   (1) நிகழ்நிலை (Online) விற்பனைகள் மூலம் KG ரீ சேட்டுக்கள் (T Shirts) உயர்வான இலாப எல்லையயைப் பெற்றுக்கொண்டன.
   (2) சக்தி ஹோம்ஸ் நிறுவனமானது, தனது புதிய வீட்டு மாதிரிகளை மேம்படுத்துவதற்காக புதினப் பத்திரிகை விளம்பரத்தைப் பிரசுரித்தது.
   (3) நிறுவனமொன்று ஹோட்டல்களைப் பதிவுசெய்வதற்கான புதிய மென்பொருள் ஒன்றைச் சர்வதேச மாநாட்டில் முன்வைத்தது.
   (4) குமரன், தன்னால் தயாரிக்கப்பட்ட தகரத்தில் அடைத்த மீன்களின் மாதிரிகளை இலவசமாக விநியோகம் செய்தார்.

16. கொழும்புப் பங்குச் சந்தையின் பட்டியற்படுத்திய கம்பனிகளின் சாதாரண பங்குகள் மற்றும் வங்கி நிலையான வைப்பு ஆகியவற்றில் முதலீடு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளும் நிதித் திரும்பல்களை முறையே எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
   (1) மூலதன ஆதாயங்கள், பங்கிலாபங்கள்
   (2) வட்டி வருமானம், மூலதன ஆதாயங்கள்
   (3) வட்டி வருமானம், பங்கிலாபங்கள்
   (4) மூலதன ஆதாயங்கள், வட்டி வருமானம்

17. கணக்கீட்டுச் செயன்முறையின் முதற் படிமுறையானது
   (1) பேரேட்டுக் கணக்குகளில் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவு செய்தல்
   (2) மூலப்பதிவு ஏடுகளில் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவு செய்தல்
   (3) கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய மூல ஆவணங்களைச் சேகரித்தல்
   (4) கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய பேரேட்டுக் கணக்குகளை இனங்காணுதல்

18. வணிகமொன்றில் நடைமுறையல்லாப் பொறுப்பை உருவாக்கும் கொடுக்கல்வாங்கல் எது?
   (1) கடன்கொடுத்தோருக்கு ரூபா 15 000 செலுத்துதல்
   (2) அலுவலகத்திற்காக ரூபா 200 000 காசுக்கு தளபாடங்களைக் கொள்வனவு செய்தல்
   (3) நீண்டகால வங்கிக் கடனாக ரூபா 500 000 பெறுதல்
   (4) விற்பனை செய்வதற்காக ரூபா 50 000 கடனுக்குப் பொருட்கள் கொள்வனவு செய்தல்

19. வணிகமொன்றின் பயன்பாட்டிற்காக ரூபா 250 000 பெறுமதியான உபகரணங்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதனைப் பதிவதற்குப் பயன்படுத்தும் மூல ஆவணம் மற்றும் மூலப்பதிவு ஏடு ஆகியன
   (1) கொள்வனவுப் பட்டியலும் கொள்வனவு நாட்குறிப்பும்
   (2) கொடுப்பனவு உறுதிச்சீட்டும் காசேடும்
   (3) நாட்குறிப்பு உறுதிச்சீட்டும் (நாட்குறிப்புக் கைச்சாத்து) பொது நாட்குறிப்பும்
   (4) கொள்வனவுப் பட்டியலும் பொது நாட்குறிப்பும்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
020585
02030000520110585

Department of Examinations Sri Lanka

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **20** தொடக்கம் **23** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

01.01.2025 இல் இருந்தவாறான இராகவன் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாடு பின்வருமாறு.

| **சொத்துக்கள்** | = | **உரிமையாண்மை** | + | **பொறுப்புக்கள்** |
|---|---|---|---|---|
| ரூபா 200 000 | = | ரூபா 120 000 | + | ரூபா 80 000 |

ஜனவரி 2025 முதல் வாரத்தில் இராகவன் வணிகத்தில் நடைபெற்ற கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு.

**A** - கடனுக்குக் கொள்வனவு செய்த பொருட்கள் ரூபா 50 000 ஆகும்.
**B** - பெற்றுக்கொண்ட வங்கிக் கடன் ரூபா 100 000 ஆகும்.
**C** - அலுவலகப் பாவனைக்காக காசுக்குக் கொள்வனவு செய்த தளபாடங்கள் ரூபா 150 000 ஆகும்.
**D** - வணிகத்தின் காசில் இருந்து செலுத்திய இராகவனின் ஆயுட் காப்புறுதிக் கட்டுப்பணம் ரூபா 10 000 ஆகும்.

**20.** 01.01.2025 இல் இருந்தவாறு இராகவன் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டின் பெறுமதிகளில் மாற்றத்தை **ஏற்படுத்தாத** கொடுக்கல்வாங்கல் எது?
(1) A (2) B (3) C (4) D

**21.** இக்கொடுக்கல்வாங்கல்களின் பின்னர் இராகவன் வணிகத்தின் உரிமையாண்மை
(1) ரூபா 220 000 (2) ரூபா 210 000 (3) ரூபா 120 000 (4) ரூபா 110 000

**22.** இக்கொடுக்கல்வாங்கல்களின் மூலம் இராகவன் வணிகத்தின் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு
(1) ரூபா 140 000 (2) ரூபா 150 000 (3) ரூபா 290 000 (4) ரூபா 340 000

**23.** இக்கொடுக்கல்வாங்கல்களுள் இராகவன் வணிகத்தின் பொறுப்புக்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல்வாங்கல்கள் எவை?
(1) A, B (2) A, D (3) B, C (4) C, D

**24.** 31.12.2024 இல் இருந்தவாறு வணிகமொன்றின் சில்லறைக் காசேட்டு மீதி ரூபா 250 ஆகும். 01.01.2025 இல் இருந்து சில்லறைக் காசேட்டு வசக்கட்டு ரூபா 2 000 இனால் அதிகரிக்கப்பட்டமையினால் அன்றைய தினத்தில் மீள நிரப்புவதற்காக ரூபா 4 750 பெற்றுக்கொள்ளப்பட்டது. 2024 டிசம்பர் மாதத்திற்கான சில்லறைக் காசேட்டுச் செலவுகள்
(1) ரூபா 5 000 (2) ரூபா 4 750 (3) ரூபா 3 000 (4) ரூபா 2 750

**25.** 31.12.2024 இல் இருந்தவாறு வணிகமொன்றின் வங்கிக் கணக்கு மீதி ரூபா 15 200 ஆகும். இத்தினத்தில் வங்கிக்கூற்று மீதி ரூபா 18 000 ஆகக் காணப்பட்டது. இவ்வித்தியாசத்திற்கான காரணம் ஒன்று மட்டுமே எனின், அக்காரணம் யாது?
(1) கடன்பட்டோர் ஒருவர் நேரடியாக வணிகத்தின் வங்கிக் கணக்கில் ரூபா 2 800 ஐ நேரடியாக வைப்புச் செய்தமை ஆகும்.
(2) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட போதிலும், டிசம்பர் மாதத்தில் வசூலிக்கப்படாத காசோலை ரூபா 2 800 ஆகும்.
(3) நிலையியற் கட்டளையின் மீது வங்கியினால் செலுத்தப்பட்ட காப்புறுதித் தவணைப்பணம் ரூபா 2 800 ஆகும்.
(4) வங்கியினால் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம் ரூபா 2 800 ஆகும்.

**26.** வணிகமொன்றின் வங்கிக் கணக்கிலும் வங்கிக் கூற்றிலும் உள்ளடங்கும் கொடுக்கல்வாங்கலைத் தெரிவுசெய்க.
(1) வழங்கப்பட்ட போதும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 100 000 ஆகும்.
(2) வைப்பிலிட்ட போதும் வசூலிக்கப்படாத காசோலை ரூபா 25 000 ஆகும்.
(3) வணிகத்தினால் வழங்கப்பட்டு வங்கியினால் கொடுப்பனவு செய்யப்பட்ட காசோலை ரூபா 5 000 ஆகும்.
(4) வணிகமானது காசு விற்பனைக்காகப் பெற்றுக்கொண்ட காசோலை ரூபா 25 000 ஆகும்.

**27.** சிராஜ் என்பவர் 05.01.2025 இல் ரூபா 10 000 கடனுக்குப் பொருட்களைக் கொள்வனவு செய்தபோது 10% கழிவுகளைப் பெற்றுக்கொண்டார். ஒரு மாதத்திற்குள் காசு செலுத்தப்படுமாயின் 5% கழிவு வழங்கப்படுமென பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது. 25.01.2025 இல் சிராஜ் பணத்தைச் செலுத்தினார். எனின், இத்தினத்தில் அவரின் பெற்ற கழிவுகள் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய தொகை
(1) ரூபா 450 (2) ரூபா 500 (3) ரூபா 1 000 (4) ரூபா 1 450

[பக். 5 ஐப் பார்க்க

**28.** 31.12.2024 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் வரவு நிரலின் மொத்தத் தொகையானது ரூபா 12 000 ஆல் அதிகரித்துக் காணப்பட்டது. இதில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல்வாங்கல்
(1) சம்பளங்கள் கணக்கின் மீதி ரூபா 6 000 இரண்டு தடவைகள் பரீட்சை மீதியில் பதியப்பட்டிருந்தமை
(2) விற்பனைகள் கணக்கின் மொத்தம் ரூபா 12 000 ஆல் குறைவாகக் காணப்பட்டமை
(3) கொள்வனவுகள் கணக்கின் மொத்தம் ரூபா 12 000 ஆல் குறைவாகக் காணப்பட்டமை
(4) கட்டடங்கள் கணக்கின் ரூபா 12 000 மீதியானது பரீட்சை மீதியின் செலவு நிரலில் பதியப்பட்டிருந்தமை

**29.** பரீட்சை மீதியின் சமப்பாட்டைப் **பாதிக்காத** கணக்கீட்டு வழு எது?
(1) தளபாடங்கள் கொள்வனவு ரூபா 10 000 ஆனது கொள்வனவுகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.
(2) கடன் கொடுத்தோருக்குச் செலுத்திய ரூபா 10 000 காசுக் கணக்கில் மட்டும் பதியப்பட்டது.
(3) காசுக் கொள்வனவுகள் ரூபா 10 000 கொள்வனவுகள் கணக்கின் செலவுப் பக்கத்தில் பதியப்பட்டது.
(4) காணிகள் கணக்கு மீதி ரூபா 100 000 பரீட்சை மீதிக்குக் கொண்டு செல்லப்படவில்லை.

- பின்வரும் தகவலைப் பயன்படுத்தி **30** ஆம் **31** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

நலன்புரிச் சங்கம் ஒன்றின் அங்கத்தவர் எண்ணிக்கை 120 ஆகும். 31.12.2024 இல் முடிவடைந்த வருடத்திற்காக, வருடத்தின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கத்தவர் கட்டணம் ரூபா 120 000 ஆகும். 31.12.2024 இல் இருந்தவாறு வருமதியாகவுள்ள அங்கத்தவர் கட்டணம் ரூபா 24 000 ஆகும்.

**30.** அங்கத்தவர் ஒருவருக்கான மாதாந்த அங்கத்துவக் கட்டணம்
(1) ரூபா 100 (2) ரூபா 120 (3) ரூபா 1000 (4) ரூபா 1200

**31.** 31.12.2024 இல் முடிவடைந்த வருமானக் கூற்றிலும் அத்திகதியில் இருந்தவாறான நிதி நிலைமைக் கூற்றிலும் உள்ளடக்கப்பட வேண்டிய அங்கத்துவக் கட்டணங்கள் முறையே
(1) ரூபா 24 000, ரூபா 120 000 (2) ரூபா 120 000, ரூபா 24 000
(3) ரூபா 144 000, ரூபா 120 000 (4) ரூபா 144 000, ரூபா 24 000

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **32** ஆம் **33** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

பாதணிகளைத் தயாரிக்கும் வணிகமொன்றில் 500 சோடி பாதணிகளின் கிரயத்துடன் தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| **A** - தோல் கொள்வனவு | 75 000 |
| **B** - நூல், பசை, ஊசிகள் மற்றும் ஏனைய மூலப்பொருட்கள் கொள்வனவு | 2 000 |
| **C** - பாதணிகள் தையற் கட்டணம் | 35 000 |
| **D** - பாதணி அடித்துண்டுகள் கொள்வனவு | 10 000 |
| **E** - பாதணி தையல் இயந்திர பெறுமானத்தேய்வு | 3 000 |
| **F** - புதிய பாதணி தையல் இயந்திரம் கொள்வனவு | 40 000 |
| **G** - பாதணி வடிவமைப்புக்கள் கட்டணம் | 6 000 |

**32.** ஒரு சோடிப் பாதணிகளுக்கான நேர் மூலப்பொருட் கிரயம்
(1) ரூபா 150 (2) ரூபா 154 (3) ரூபா 170 (4) ரூபா 174

**33.** உற்பத்தி மேந்தலைக் கிரயத்தில் உள்ளடங்கும் உருப்படிகள்
(1) A, B (2) B, D (3) B, E (4) C, E

[பக். 6 ஐப் பார்க்க

020585
Department of Examinations - Sri Lanka
Department of Examinations Sri Lanka
0103000052011 0585

Department of Examinations Sri Lanka

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **34** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சமரன் என்பவர் 01.01.2024 இல் ரூபா 100 000 ஐ ஈடுபடுத்தியதன் மூலம் வாடகைக்கு எடுத்த கட்டடம் ஒன்றில் வணிகத்தை ஆரம்பித்தார். 31.12.2024 இல் முடிவடைந்த வருடத்திற்காக இந்த வணிகம் தொடர்பிலான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | ரூ. |
|---|---|---|
| **31.12.2024 இல் இருந்தவாறு சொத்துக்கள் :** | | |
| வங்கி மீதி | - | 44 000 |
| கடன்பட்டோர் | - | 86 000 |
| காசு மீதி | - | 125 000 |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | - | 250 000 |
| உடைமையாளரால் ஈடுபடுத்தப்பட்ட விநியோக வாகனம் (01.01.2024 இல் இருந்தவாறு கிரயத்தில்) | - | 800 000 |
| **31.12.2024 இல் இருந்தவாறு பொறுப்புக்கள் :** | | |
| 01.01.2024 இல் பெற்ற வங்கிக்கடன் 10% | - | 100 000 |
| கடன் கொடுத்தோர் | - | 42 500 |
| **வருமானம் :** | | |
| காசு விற்பனைகள் | - | 350 000 |
| கடன் விற்பனைகள் | - | 370 000 |
| பெற்றுக்கொண்ட ஏனைய வருமானங்கள் | - | 80 000 |
| **செலவுகள் :** | | |
| செலுத்திய கட்டட வாடகை | - | 30 000 |
| செலுத்திய மின்சாரம் | - | 60 000 |
| காசுக் கொள்வனவுகள் | - | 340 000 |
| கடன் கொள்வனவுகள் | - | 100 000 |
| செலுத்திய கடன் வட்டி | - | 7 500 |

**மேலதிக தகவல்கள் :**

1. விநியோக வாகனங்கள் வருடாந்தம் 10% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
2. 31.12.2024 இல் இருந்தவாறு எதுவித சரக்கிருப்புக்களும் காணப்படவில்லை.
3. கடன்பட்டோரில் இருந்து ரூபா 6 000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்படல் வேண்டும்.

**34.** 01.01.2024 இல் சமரனால் வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனம்
(1) ரூபா 100 000 (2) ரூபா 200 000 (3) ரூபா 800 000 (4) ரூபா 900 000

**35.** 31.12.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான சமரன் வணிகத்தின் விற்பனைக் கிரயம்
(1) ரூபா 340 000 (2) ரூபா 380 000 (3) ரூபா 440 000 (4) ரூபா 720 000

**36.** 31.12.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான சமரன் வணிகத்தின் மொத்த இலாபம்
(1) ரூபா 280 000 (2) ரூபா 340 000 (3) ரூபா 360 000 (4) ரூபா 380 000

**37.** 31.12.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான வருமானக் கூற்றில் காணப்படும் வங்கிக்கடன் வட்டி
(1) ரூபா 2 500 (2) ரூபா 7 500 (3) ரூபா 10 000 (4) ரூபா 17 500

**38.** 31.12.2024 இல் இருந்தவாறு இவ்வணிகத்தின் நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் சரியான உருப்படி
(1) சென்மதி வங்கிக்கடன் வட்டி ரூபா 10 000
(2) கடன்பட்டோர் மீதி ரூபா 86 000
(3) விநியோக வாகனத்தின் தேறிய பெறுமதி ரூபா 720 000
(4) வங்கிக் கடன் ரூபா 90 000

**39.** 31.12.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான வருமானக் கூற்றில் விற்பனை விநியோகச் செலவுகளின் மொத்தத் தொகை
(1) ரூபா 6 000 (2) ரூபா 80 000 (3) ரூபா 86 000 (4) ரூபா 96 000

**40.** 31.12.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான சமரன் வணிகத்தின் தேறிய இலாபம்
(1) ரூபா 94 000 (2) ரூபா 174 000 (3) ரூபா 274 000 (4) ரூபா 360 000

❊ ❊

[பக். 7 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**60 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024 (2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024 (2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024 (2025)

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II
Business and Accounting Studies I, II

## வணிகக் கல்வியும் கணக்கீடும் II

**அறிவுறுத்தல்கள் :**

* **முதலாம்** வினா உட்பட, பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும், பகுதி **II** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* அறிவுறுத்தல்களுக்கமைய **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள், பரீட்சார்த்தியினால் வெட்டிவிடப்படாத சந்தர்ப்பங்களில் பரீட்சகரினால் புள்ளிகள் வழங்கப்படாமலேயே வெட்டிவிடப்படும்.

**1.** பின்வரும் சம்பவக் கற்கையைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையான வினாக்களுக்கு விடை தருக.

கைவினைகள் துறையில் டிப்ளோமாதாரியான சங்கீதா, சுற்றுலாவின் சொர்க்கமாகக் கருதப்படும் நிலாவெளி கிராமத்தில் வசித்து வருகின்றார். சங்கீதா, தனது தந்தையாரால் நடாத்தப்படும் கைவினை தயாரிப்புக்கள் வணிகத்தை நவீனமயப்படுத்தியதுடன் அதனை ஒரு புதிய வணிகமாக 'சங்கீதா கைவினை வணிகம்' என்ற பெயரில் 01.01.2025 இல் ஆரம்பித்தார். இத்தினத்தில் சங்கீதாவின் தந்தையாரின் வணிகத்தில் விற்பனை செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த ரூ. 250 000 பெறுமதியான கைவினைத் தயாரிப்புக்களும் ரூ. 100 000 பெறுமதியான இயந்திர உபகரணங்களும் சங்கீதாவுக்கு அவரின் தந்தையாரால் வழங்கப்பட்டன. அன்றைய தினமே சங்கீதா 12% வருடாந்த வட்டியில் ரூ. 200 000 ஐ வங்கிக் கடனாகப் பெற்றுக்கொண்டதுடன், ரூ. 150 000 பெறுமதியான தனக்குச் சொந்தமான நவீன உபகரணத்தையும் வணிகத்தில் ஈடுபடுத்தினார். 31.01.2025 இல் முடிவடைந்த மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| கடனுக்குக் கொள்வனவு செய்த மூலப்பொருட்கள் | 180 000 |
| செலுத்திய உள்வந்த வண்டிக் கூலிகள் | 10 000 |
| கடன்கொடுத்தோருக்குச் செலுத்தியது | 50 000 |
| செலுத்திய ஊழியர் கூலிகள் | 80 000 |
| செலுத்திய விநியோக வாகனக் கட்டணங்கள் | 30 000 |
| காசு விற்பனைகள் | 400 000 |
| கடன் விற்பனைகள் | 200 000 |

சங்கீதா தனது தயாரிப்புக்களை தனது காட்சியறையில் வைத்தே உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்கின்றார். மேலும், சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்வதற்காக, அப்பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலாப் பயணிகள் விடுதிகளுக்கும் தனது தயாரிப்புக்களை விநியோகிக்கிறார். எதிர்வரும் வருடத்தில் இலங்கையின் ஏனைய சுற்றுலா நகரங்களிலும் 'சங்கீதா கைவினை வணிகத்தின்' காட்சியறைகளைத் திறப்பதற்குச் சங்கீதா தீர்மானித்துள்ளார்.

**மேலதிக தகவல்கள் :**

* 2025 ஜனவரி மாதத்துக்கான ரூ. 8000 மின்சாரப்பட்டியல் இதுவரை செலுத்தப்படவில்லை.
* நடைமுறையல்லாச் சொத்துக்கள் வருடாந்தம் 12% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.

(i) (அ) 'சங்கீதா கைவினை வணிகத்தின்' உடைமையின் அடிப்படையில் அதற்கு உரித்தான வணிக அமைப்பு வகை எது?

(ஆ) 'சங்கீதா கைவினை வணிகத்தின்' பலம் **ஒன்றையும்** வாய்ப்பு **ஒன்றையும்** எழுதுக.

(ii) 'சங்கீதா கைவினை வணிகத்தில்' இடம்பெறும் சில்லறை வியாபாரம், மொத்த வியாபாரம் ஆகிய ஒவ்வொன்றுக்கும் **ஒவ்வொரு** உதாரணம் வீதம் எழுதுக.

[பக். 8 ஐப் பார்க்க

Department of Examinations - Sri Lanka

Department of Examinations Sri Lanka



(iii) (அ) 'சங்கீதா கைவினை வணிகத்தின்' இலக்குச் சந்தை எது?
(ஆ) 'சங்கீதா கைவினை வணிகத்தினால்' செய்யப்பட்ட பின்வரும் ஒவ்வொன்றுக்கும் உரித்தாகும் முகாமைத்துவக் கருமத்தை எழுதுக.
(1) வணிகத்துக்காகப் பெற்றுக்கொண்ட வங்கிக் கடன்
(2) ஏனைய நகரங்களில் காட்சியறைகளைத் திறக்கத் தீர்மானித்துள்ளமை

(iv) பின்வரும் ஒவ்வொரு அக்கறையுடைய தரப்பினரும் 'சங்கீதா கைவினை வணிகத்தில்' அக்கறை செலுத்துவதற்கான காரணம் **ஒன்று** வீதம் எழுதுக.
(1) வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள்
(2) சங்கீதா

(v) 01.01.2025 இல் இருந்தவாறு 'சங்கீதா கைவினை வணிகத்தின்' அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டை எழுதுக.

(vi) 01.01.2025 இல் சங்கீதா தனக்குச் சொந்தமான ரூ. 150 000 பெறுமதியுடைய நவீன உபகரணத்தை வணிகத்தில் ஈடுபடுத்தியமையைப் பதிவதற்கான இரட்டைப் பதிவை எழுதுக.

(vii) (அ) 'சங்கீதா கைவினை வணிகம்' பேணவேண்டிய மூலப்பதிவு ஏடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(ஆ) மேலே (vii) (அ) இல் குறிப்பிட்ட மூலப்பதிவு ஏடுகள் ஒவ்வொன்றிலும் பதியப்படும் கொடுக்கல்வாங்கல்கள் ஒவ்வொன்று வீதம் மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் இருந்து எழுதுக.

(viii) 31.01.2025 இல் இருந்தவாறு 'சங்கீதா கைவினை வணிகத்தில்' காணப்படும் நடைமுறைப் பொறுப்புக்கள் **இரண்டினைப்** பெறுமதிகளுடன் எழுதுக.

(ix) 31.01.2025 இல் இருந்தவாறு 'சங்கீதா கைவினை வணிகத்தின்' நடைமுறையல்லாச் சொத்துக்களின் கொண்டு செல் பெறுமதியைக் கணிப்பிடுக.

(ix) 31.01.2025 இல் இருந்தவாறு 'சங்கீதா கைவினை வணிகத்தின்' காசு மீதியைக் கணிப்பிடுக.

**(02 × 10 = 20 புள்ளிகள்)**

## பகுதி I - வணிகக் கல்வி

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

2. (i) அரச திணைக்களம் ஒன்றின் குணாம்சங்கள் **இரண்டு** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.
(அ) தேவைகள் ஆளுக்கு ஆள் மாறுபடும்.
(ஆ) ஊழியர்களின் உடல் ரீதியான முயற்சி மட்டுமே உற்பத்திக் காரணிகளில் உழைப்பாகக் கருதப்படும்.
(இ) சில்லறை வியாபாரியானவர் மொத்த விற்பனையாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே ஓர் இடைத்தரகராகத் தொழிற்படுகின்றார்.
(ஈ) கூட்டுறவுச் சங்கங்கள் தமது அங்கத்தவர்களின் நலன்புரிக்காகத் தொழிற்படுகின்றன. (02 புள்ளிகள்)

(iii) சாரங்கா தனது சேமிப்பை ஈடுபடுத்தியதன் மூலம் 'ஷைன் வெதுப்பகம்' வணிகத்தை நடாத்துகின்றார். போட்டிச் சந்தையில் கேள்வி அதிகரித்தமையினால் வணிக நடவடிக்கைகளை வினைத்திறனான முறையில் கொண்டு நடாத்துவதற்காக வணிகத்தில் அனுபவமுள்ள ஆனந்த் என்பவரை தனது வணிகத்தில் இணைத்துக் கொண்டார்.
(அ) 'ஷைன் வெதுப்பக' வணிகத்தின் பலங்கள் **இரண்டினை** எழுதுக.
(ஆ) இச்சம்பவக் கற்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 'ஷைன் வெதுப்பக' வணிகத்தின் அக்கறையுடைய தரப்பினர் **இருவரை** எழுதுக. (02 புள்ளிகள்)

(iv) பின்வருவன கிரிதரன் என்பவர் கொடுக்கல்வாங்கல் செய்த வணிக இடங்கள் சிலவாகும்.
**A** - நவீன் புத்தக விற்பனையாளர்கள்
**B** - ஸ்மார்ட் புடைவை வியாபாரிகள்
**C** - மிஹிரி வெதுப்பக உற்பத்தியாளர்கள்
(அ) மேலே தரப்பட்ட ஒவ்வொரு வணிகத்தின் மூலமும் கிரிதரன் நிறைவேற்றிக் கொண்ட தேவைகளைக் குறிப்பிடுக.
(ஆ) மேலே தரப்பட்ட வணிகங்களில் இருந்து பொருள் உற்பத்தி வணிகம் **ஒன்றையும்** சேவை வழங்கும் வணிகம் **ஒன்றையும்** எழுதுக.

(02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

[பக். 9 ஐப் பார்க்க

3. (i) வணிகம் ஒன்று நடைமுறைக் கணக்கைப் பேணுவதன் மூலம் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.

(அ) குறுக்குக் கோடிடப்பட்ட காசோலைகளை மட்டுமே நடைமுறைக் கணக்கில் வைப்பிலிட முடியும்.
(ஆ) எந்தவொரு இடரும் காப்புறுதி செய்யப்பட முடியும்.
(இ) பாரிய அளவிலான வணிகங்களுக்கு மட்டுமே வணிகத் தொடர்பாடல் முக்கியமானதாகும்.
(ஈ) பொருளொன்றின் விற்பனை விலையைத் தீர்மானிப்பதில் போக்குவரத்துக் கிரயம் ஒரு முக்கியமான காரணியாகும். (02 புள்ளிகள்)

(iii) நிமலன் என்பவர் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ஒரு பகுதி நிதியைப் பயன்படுத்தி வணிகம் ஒன்றை ஆரம்பித்தார். அவர் இர்ஷாத்திடம் இருந்து மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தபோது இலங்கை வங்கியில் காணப்படும் தனது கணக்கின் மூலம் காசோலை ஒன்றை வழங்கினார்.

(அ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையிடுபவரையும் கட்டளையைப் பெறுபவரையும் குறிப்பிடுக.
(ஆ) நிமலன் வைத்திருக்கும் முதலீடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) பின்வரும் இரண்டு நிகழ்வுகளையும் கருத்திற்கொள்க.

**நிகழ்வு A**

சாரதாவின் வீடு வெள்ளத்தினால் சேதமடைந்தது. அவர் இச்சேதம் தொடர்பில் தனது கையடக்கத் தொலைபேசியின் மூலம் காப்புறுதிக் கம்பனிக்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றை அனுப்பினார். அவர் தனது இயற்கை அனர்த்தக் காப்புறுதிப் பத்திரத்தின் மூலம் நட்டஈட்டை முழுமையாகப் பெற்றுக்கொண்டார்.

**நிகழ்வு B**

சஞ்சயன் என்பவர் ஆயுட் காப்புறுதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்கனவே காணப்படும் தனது மருத்துவ அறிக்கைகளைச் சரியாக வெளிப்படுத்தவில்லை. அவர் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்காகத் தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டார். ஆனால், காப்புறுதிக் கம்பனியானது நட்டஈட்டைச் செலுத்த மறுத்தது.

(அ) மேலே தரப்பட்ட A மற்றும் B ஆகிய ஒவ்வொரு நிகழ்விலும் நட்டஈட்டைச் செலுத்துவதில் அல்லது செலுத்தாமல் விடுவதில் தாக்கம் செலுத்திய காப்புறுதித் தத்துவத்தைக் குறிப்பிடுக.
(ஆ) மேலே தரப்பட்ட A மற்றும் B ஆகிய ஒவ்வொரு நிகழ்விலும் பயன்படுத்தப்பட்ட தொடர்பாடல் ஊடகத்தைப் பெயரிடுக.

(02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

4. (i) காணிகளில் முதலிடு செய்வதன் மூலம் கிடைக்கும் திரும்பல்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

(அ) பௌதீக உற்பத்திப்பொருட்களுக்கு மட்டுமே சந்தைப்படுத்தற் கலவை பொருத்தமானதாகும்.
(ஆ) சேமிப்புக் கணக்குகள் ஏனைய சகல முதலீடுகளையும் விட உயர்வான திரும்பலை வழங்குகின்றன.
(இ) முகாமைத்துவச் செயன்முறையின் முதலாவது கருமம் திட்டமிடல் ஆகும்.
(ஈ) ஒவ்வொரு முகாமைத்துவக் கருமத்திலும் தீர்மானம் எடுத்தல் உள்ளடங்கியுள்ளது. (02 புள்ளிகள்)

(iii) 'பசுமை அலை' மூலிகை உற்பத்திப்பொருட்களின் உடைமையாளரான ஜீவன், உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக புதிய இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்தார். அத்துடன், உற்பத்தியின் பயனுறுதியைக் கண்காணிப்பதற்காக உற்பத்தி மேற்பார்வையாளர் ஒருவரையும் அவர் ஆட்சேர்ப்புச் செய்தார்.

(அ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் காணப்படும் முகாமைத்துவக் கருமங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(ஆ) மேலே (iii) (அ) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு முகாமைத்துவக் கருமத்துக்கும் சம்பவக் கற்கையிலிருந்து **ஒவ்வொரு** உதாரணம் வீதம் எழுதுக.

(02 புள்ளிகள்)

(iv) நகுலன் தனது சேமிப்புக்களை நிலையான வைப்புக்கள், காணி மற்றும் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியற்படுத்திய கம்பனிகள் ஆகியவற்றில் முதலீடு செய்தார்.

(அ) மேலே தரப்பட்ட முதலீடுகளில் உயர்வான இடரைக் கொண்டுள்ள முதலீடு யாது?
(ஆ) மேலே தரப்பட்ட ஒவ்வொரு முதலீட்டில் இருந்தும் நகுலன் பெற்றுக்கொள்ளும் நிதித் திரும்பல்களை முறையே குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

[பக். 10 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka



## பகுதி II - கணக்கீடு

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**5.** (i) சொத்தொன்றின் குணாம்சங்கள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டின் அனுகூலங்கள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) வணிகமொன்றின் இரண்டு கொடுக்கல்வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.

| | சொத்துக்கள் (ரு.) | = | உரிமையாண்மை (ரு.) | + | பொறுப்புக்கள் (ரு.) |
|---|---|---|---|---|---|
| (1) | − 15 000 (காசு) | | | | − 15 000 (கடன்கொடுத்தோர்) |
| (2) | − 25 000 (சரக்கிருப்பு)<br>+ 30 000 (காசு) | | + 5 000 (இலாபம்) | | |

**வேண்டப்படுவது :**
மேலே தரப்பட்ட **இரண்டு** கொடுக்கல்வாங்கல்களையும் எழுதுக.

(ஆ) சுரம்யா வணிகத்தின் 2024 இற்கான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரு. |
|---|---|
| 01.01.2024 இல் இருந்தவாறு மூலதனம்.................................................. | 500 000 |
| வருடத்திற்கான வருமானம்.............................................................. | 360 000 |
| வருடத்திற்கான செலவுகள்.............................................................. | 210 000 |
| வருடத்தின்போது சுரம்யாவினால் முதலீடு செய்யப்பட்ட தொகை............. | 100 000 |

**வேண்டப்படுவது :**
31.12.2024 இல் இருந்தவாறு உடைமையாளரின் உரிமையாண்மையைக் கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(iv) 01.01.2025 இல் இருந்தவாறு நிரஞ்சலா வணிகத்தின் வங்கி மீதி ரு. 20 250 ஆகும். 2025 ஜனவரி மாதத்தின்போது நடைபெற்ற கொடுக்கல்வாங்கல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 02.01.2025 | - | வங்கியில் வைப்பிலிட்ட தொகை ரு. 15 000 ஆகும். |
| 15.01.2025 | - | மின்சாரப் பட்டியலுக்காக ரு. 10 000 காசோலை வழங்கப்பட்டது. |
| 18.01.2025 | - | மின்சாரப் பட்டியலுக்காக வழங்கப்பட்ட காசோலை மறுக்கப்பட்டது. |
| 27.01.2025 | - | கடன்கொடுத்தோரான சமீரனுக்கு வழங்கப்பட்ட காசோலை ரு. 28 500 ஆகும். பெற்ற கழிவு ரு. 1500 |

**வேண்டப்படுவது :**
நிரஞ்சலா வணிகத்தின் கழிவு நிரலுடன் கூடிய வங்கிக் கணக்கைத் தயாரிப்பதுடன் 31.01.2025 இல் இருந்தவாறான வங்கி மீதியைக் கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

[பக். 11 ஐப் பார்க்க

6. (i) கணக்கீட்டுச் செயன்முறையில் வழுக்கள் ஏற்படக்கூடிய **இரண்டு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
(02 புள்ளிகள்)

(ii) சாவியன் உற்பத்தி வணிகத்தின், 2025 ஆம் வருடத்திற்கான 1000 நாட்காட்டிகளை அச்சிடுவதுடன் தொடர்புடைய கிரயத் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| அச்சிடும் தாள்களும் தீந்தையும் (INK)................................... | 100 000 |
| அச்சிடும் ஊழியரின் மாதாந்த சம்பளம்.................................. (இரண்டு அச்சிடும் ஊழியர்கள் உள்ளனர்) | 40 000 |
| நாட்காட்டிகளை வடிவமைப்பதற்கான செலவுகள்...................... | 5 000 |
| அச்சிடும் இயந்திரத்தின் வருடாந்த பெறுமானத்தேய்வு.............. | 24 000 |
| அச்சிடும் பகுதிக்கான மாதாந்த மின்சாரப் பட்டியல்.................. | 8 000 |
| அச்சிடும் பகுதி சுத்திகரிப்பாளரின் மாதாந்தச் சம்பளம்............ | 15 000 |
| பசை, நூல், குண்டூசிகள்........................................................ | 1 000 |
| அச்சிடும் பகுதி காவலாளியின் மாதாந்தச் சம்பளம்.................. | 20 000 |

**வேண்டப்படுவது :**
கிரயத்தின் மீது 10% இலாப எல்லையில் நாட்காட்டி ஒன்றின் விற்பனை விலையைக் கணிப்பிடுக.
(02 புள்ளிகள்)

(iii) 31.12.2024 இல் ஹசீனா வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் வரவு, செலவு நிரல்களின் மொத்தம் கீழே தரப்பட்டுள்ளது.

வரவு நிரல் - ரூ. 685 000
செலவு நிரல் - ரூ. 750 000

இம்மாற்றத்தில் தாக்கம் செலுத்திய காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(1) காசுக் கொள்வனவுகள் ரூ. 50 000 கணக்குகளில் இரண்டு தடவைகள் பதியப்பட்டுள்ளன.
(2) சம்பளக் கணக்கின் வரவுப் பக்கம் ரூ. 1 000 கூடுதலாகக் கூட்டப்பட்டுள்ளது.
(3) காணிக் கணக்கின் மீதி ரூ. 666 000 ஆனது பரீட்சை மீதியில் ரூ. 600 000 எனப் பதியப்பட்டுள்ளது.
(4) தளபாடக் கொள்வனவு ரூ. 25 000 கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது :**
மேலே தரப்பட்டுள்ள வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுக.
(04 புள்ளிகள்)

(iv) 31.12.2024 இல் இருந்தவாறு நிசானா வணிகத்தின் வங்கிக் கணக்கின் சாதகமான மீதி ரூ. 45 000 ஆகும். இத்திகதியில் வங்கிக்கூற்று மீதி ரூ. 36 000 ஆகும். இவ்வித்தியாசத்திற்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(1) டிசம்பர் மாதத்தில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட 700750 ஆம் இலக்கக் காசோலை ரூ. 24 000 வசூலிக்கப்படவில்லை.
(2) நிலையியற் கட்டளையின் கீழ் வங்கியால் செலுத்தப்பட்ட காப்புறுதித் தவணைப்பணம் ரூ. 6 000 ஆகும்.
(3) கடன்கொடுத்தோர் ஒருவருக்கு 820004 ஆம் இலக்க ரூ. 10 000 காசோலை வழங்கப்பட்டபோதும் அது இன்னமும் வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.
(4) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து வங்கிக்கு நேரடியாகக் கிடைத்த தொகை ரூ. 11 000 ஆகும்.

**வேண்டப்படுவது :**
(அ) 31.12.2024 இல் இருந்தவாறு நிசானா வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதியைச் செம்மையாக்குக.
(ஆ) 31.12.2024 இல் இருந்தவாறு வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றைத் தயாரிக்குக.
(04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

[பக். 12 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

7. (i) இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) 31.12.2024 இல் முடிவடைந்த வருடத்திற்காக நட்சத்திர விளையாட்டுக் கழகத்தினால் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

- அங்கத்தவர்களின் எண்ணிக்கை 80 ஆகும்.
- ஒரு அங்கத்தவருக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூபா 1 000 ஆகும்.
- ஐந்து அங்கத்தவர்கள் தமது வருடாந்த அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தவில்லை.
- விளையாட்டுக் கழகத்துக்கு, ரூபா 50 000 பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் நன்கொடையாகக் கிடைத்துள்ளன.
- பார்வையாளர் அரங்கிற்கு பொறுப்பாக இருப்பவருக்கான மாதாந்தச் சம்பளம் ரூபா 10 000 ஆகும். 2024 டிசம்பர் மாதத்திற்கான இவரது சம்பளம் இன்னமும் செலுத்தப்படவில்லை.
- விளையாட்டு மைதானத்தை வாடகைக்கு வழங்கியதன் மூலம் கிடைத்த வாடகை ரூபா 100 000 ஆகும். 31.12.2024 இல் இருந்தவாறு வாடகை வருமதி ரூபா 10 000 ஆகும்.

**வேண்டப்படுவது :**
31.12.2024 இல் முடிவடைந்த வருடத்திற்காக நட்சத்திர விளையாட்டுக் கழகத்தினால் தயாரிக்கப்படும் பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கில் பதியப்படும் **இரண்டு** உருப்படிகளைத் தொகைகளுடன் தருக. (02 புள்ளிகள்)

(iii) 31.12.2024 இல் இருந்தவாறு சாரதாவின் சில்லறை வணிகத்தின் பரீட்சை மீதி பின்வருமாறு.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| மூலதனம் | | 455 000 |
| 01.01.2024 இல் இருந்தவாறு சரக்கிருப்பு | 58 000 | |
| வங்கிக்கடன் 8% | | 50 000 |
| கடன்பட்டோர் | 45 000 | |
| கடன்கொடுத்தோர் | | 51 000 |
| கொள்வனவுகள் | 375 000 | |
| விற்பனைகள் | | 590 000 |
| உள்வந்த வண்டிக்கூலி | 22 000 | |
| கட்டட வாடகை | 10 000 | |
| விற்பனை ஊழியர் கூலிகள் | 90 000 | |
| மின்சாரக் கட்டணங்கள் | 50 000 | |
| கொடுத்த கழிவுகள் | 12 000 | |
| பெற்ற கழிவுகள் | | 15 000 |
| 01.01.2024 இல் இருந்தவாறு விநியோக வாகனங்கள் கிரயத்தில் | 400 000 | |
| 01.01.2024 இல் இருந்தவாறு விநியோக வாகனங்கள் பெறுமானத்தேய்வு ஏற்பாடு | | 64 000 |
| கடன் வட்டி | 2 000 | |
| வங்கிக் கட்டணங்கள் | 1 500 | |
| 01.01.2024 இல் இருந்தவாறு இயந்திரங்களும் உபகரணங்களும் கிரயத்தில் | 150 000 | |
| காசு மீதி | 9 500 | |
| | 1 225 000 | 1 225 000 |

**மேலதிக தகவல்கள் :**

- 31.12.2024 இல் இருந்தவாறு சரக்கிருப்புகள் ரூ. 60 000 ஆகும்.
- மாதாந்த கட்டட வாடகை ரூ. 1 000 ஆகும்.
- விநியோக வாகனங்கள் வருடாந்தம் 8% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.

**வேண்டப்படுவது :**

(அ) 31.12.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான சாரதா வணிகத்தின் இலாப நட்டக் கூற்று (04 புள்ளிகள்)

(ஆ) 31.12.2024 இல் இருந்தவாறான சாரதா வணிகத்தின் நிதி நிலைமைக் கூற்று (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

* * *



Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka